# Translation - Tamil To English



| வெளிறும் அல்லது வளரும் வண்ணக்காதல் | Withering or Nurturing the Colorful Love |
|---|---|
| காதல் என்பது அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான விஷயம் தான். இந்த வார்த்தையை கேட்கும் அநேக யுவாக்களும் யுவதிகளும், வானம் அவர்களின் மீது வண்ண மலர்களைத்தூவ, தன் மனதில் சிறகடிக்கும் வண்ணத்து பூச்சிகளினால் உண்டான ஒரு பேரின்ப கிளர்ச்சியை உணருகின்றனர். சுற்று சூழலின் கவலையின்றி, பல கிரகங்களை கடந்து பறந்து சென்று, பகலிலும் அலங்காரமான நட்சத்திரங்களை கண்டு களிக்கின்றனர்.<br><br>அதே நேரத்தில், சமூக பாதுகாப்பு விதிகளின்படி, காதலர்களின் பெற்றோர்கள், தன் பிந்திய வாழ்க்கையும் இதே நிலையில், மறக்க முடியாத இனிய அனுபவங்களுடன் இருந்ததை அறிந்திருந்தும், தன் எதிர்ப்பை தெரிவிக்கின்றனர். ஒரு வேளை இது பெற்றோருடைய அன்பு தன் மக்களின் பால், அவர்கள் வளர்ந்துவிட்ட போதிலும், , காதலை இவர்களில் யாரேனும் ஒருவர் தப்பான வழியில் பயன்படுத்திக்கொண்டால், மறைந்திருக்கும் கசப்பு முளையிட்டு வெளிக்கிளம்பி, அவர்கள் அதை சுவைக்கக்கூடும். அவர்களின் எதிர்ப்புக்கு காரணம், கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்றே. அது ஜாதி, குலம், மதம், செழிப்பு, அந்தஸ்து மற்றும் மரியாதை, குடும்ப பின்னணி, கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், | Love is a matter of happiness to everyone. On hearing this sweet word, most of the boys and girls feel tingling sensation and a turmoil of ecstasy created by flirting and flickering butterflies, in their hearts, while the heavens shower colorful flowers upon them. Unmindful of the atmosphere, they take a flight across the planets, start seeing imaginative and flamboyant stars, even during the day times.<br><br>At the same time, as has been the social and security norms, parents of both the lovers take objections, knowing well that their past life itself was elapsed in such conditions, with experiences of so sweet a moment unforgettable. May be it is their parental love or worries towards their kids, yet they are now grown up though, if the love is misused by either of them, they would have to taste the hidden bitterness that could be sprouted out. The reason for their |

கல்வி தகுதி, மேலும் குறைவில்லாமல், மேனி நிறம் மற்றும் அழகு ஆகியவைகளின் கணிப்பும் காரணங்களாகும். அநேகமாக பையனுடைய பெற்றோர்கள் தன் குலத்திற்கேற்ற பெண்ணைத்தான் தேடுகின்றனர். பையனுடைய விருப்பத்திற்கு இணங்கவேண்டுமாயின் அவள் சிறிது உயர் குலத்தை சேர்ந்தவளாக இருந்தால், ஒப்புக்கொள்கின்றனர். பெண்ணுடைய பெற்றோர், கூடுமானவரை மேற் குறிப்பிட்ட அனைத்து விதிகளின் அளவுகோலை தாண்டி பையன் இருந்தால், சந்தோஷமாக ஒப்புக்கொள்கின்றனர். கலாச்சார பழக்க வழக்கங்களை கருத்தில் கொண்டு ஏதாவது ஒரு விதிமுறைக்கு ஏற்படும் எதிர்ப்பு, சண்டை சச்சரவு, விரசம் மற்றும் மோதல்களுக்கு வித்திட்டு, கடைசியில் காதலர்களை பிரித்து விடுகிறது. இதனால் ஏற்படும் எரிச்சல், மன அழுத்தம், தவறான முறையில் நடத்தப்பட்ட மற்றும் பலவீனமான மனங்களின் வாழ்வையே பலி வாங்கி விடுகிறது.

தன் பிள்ளை வளர்ந்து ஒரு டாக்டராக, ஒரு இஞ்ஜீனியராக, ஒரு மனேஜராகவோ அல்லது ஒரு பெரிய தொழிலதிபனாகவோ வரவேண்டும் என்பது தான் ஒவ்வொரு பெற்றோருடைய கனவாக இருக்கிறது. பிள்ளையின் நாளங்களில் இந்த கருத்துக்களை செலுத்தியே அவர்களை வளர்க்கின்றனர். பிள்ளைகளின் கல்வியும் வேலை வாய்ப்பும் வாழ்க்கையின் முதலான குறிக்கோளாகிவிடுகிறது.

ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் முதற்கை அனுபவத்தை புகட்ட, அவர்களுடைய பதின்ம வயதிலிருந்தே, நல்லது எது, கெட்டது எது, எதை நம்பவேண்டும், எதை நம்பக்கூடாது, செழிக்க எந்த வழியை பின்பற்றவேண்டும், எந்த வழியில் பாதங்கள் படக்கூடாது, நல்ல வழிகாட்டி தேவைப்பட்டால், யாரை அணுகவேண்டும், அந்த சூழ்நிலைகளில் யாரை அவர்கள் புறக்கணிக்கவேண்டும், ஆகியவைகளை, பெற்றோர்கள் நன்கு விளக்கிச்சொல்லவேண்டும். தாய் தன் மகளை பயிற்சிக்கும் பொழுது, தந்தை தன் பையனின் மீது ஒரு கண் வைத்து, நேரத்திற்கு நேரம், அவனுக்கு தேவைப்பட்ட அறிவுறையை புகட்டவேண்டும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் பாலியல் ஒரு தடுக்கப்பட்ட விஷயமாக கருதப்பட்டு, வெளிப்படையாக பெற்றோராலும், பிள்ளைகளாலும் விவாதிக்கப்படுவதில்லை. இருப்பினும், அந்த பேச்சை பாவமாக அடையாளம் கண்டு, அந்த மாதிரி முக்கியமான ஒரு விஷயத்தை தரை விரிப்பிற்கு அடியில் துடைத்து தள்ளி

objection has to be accounted for. That starts with caste, creed, religion, prosperity, position and prestige, family backgrounds, culture, customs and practices, level of education, including but not limited to color, complexion and beauty. Most of the parents of the boy seek girls from their own caste and creed, or if at all they would have to agree to the wishes of the boy, they would consider a girl’s status to be somewhat higher in the case of a caste. The girl’s parents would have no objection if their darling child selects a person as higher as possible in all respects, or as far as any of the above criteria is concerned. Taking into considerations all such customs and practices, anything would become objectionable which seeds to the conflict, ultimately resulting in the breakage of lovers. This frustration and desperation causes loss of lives, to the weak and misguided hearts.

It is the dream of every parent to see their tot growing and becoming a doctor, an engineer, an administrator or a business tycoon. They foster their children with these personalized ideas injecting in their veins. Education and employment of the children becomes the first and foremost aim, purpose and goal of their lives.

In order to educate the first-hand experience, right from the teenage of the boys and girls, parents should explain good and bad to them of the life, what to believe and what not to believe, which way should they adopt to prosper, and which way they shouldn’t tread, whom to turn to in case of requirement of a proper guidance and whom should they avoid in such circumstances, so on and so forth. While the mother

விடுவதைவிட, மேலாக தொட்டும் தொடாமலும், புரிய வைத்து, எதிர் பாலின் மீது மோகம்கொள்வதால் உண்டாகும் கேடுகளை தவிர்க்க முயற்சிப்பது, எவ்வளவு அவசியம் என்பதை உணர்த்தி, தவறினால், அறநெறிகளின் உச்சியிலிருந்து வழுக்கி விழும் அபாயத்தை உணர்த்தவேண்டும்.

நன்கு ஆலோசித்து அறிவுறுத்தப்படாத பிள்ளைகள், தன் பெற்றோர் தன் நலனுக்கு எதிராக செயல்படுவதாக தவறான கருத்துக்கு ஆளாகிவிடுவர். அந்த மாதிரி தவறான கருத்து அவநம்பிக்கை, வெறுப்பு மற்றும் குழப்பத்தை உண்டாக்கி பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் மத்தியில் பிளவை ஏற்படுத்தும். இந்த நிலைக்கு ஆளான பிள்ளைகள் சில நேரம், எதிர் பாலினத்துடன் அதுவரை தடுக்கப்பட்டிருந்த நெருக்கத்தின் இன்பத்தை கண்டுகொள்ள, தன் கலாச்சார, அறநெறி முறைகளை உடைத்தெறிய முயற்சிக்கின்றனர்.

காதல் பரிசுத்தமானதும், புனிதமானதும் கூட. காதல் மரணத்தை அளிக்காது, விரக்தியும், வெறுப்பும், மன அழுத்தமும் தான் ஒரு நபரை தற்கொலைக்கோ கொலை செய்யவோ இழுத்துச்செல்லும் காரணிகள்.

காதல் என்பது காதலிக்கும் இருவர் மட்டுமே காணக்கூடிய வானவில் என்று யாரோ சரியாகத்தான் சொல்லியிருக்கிறார். எதிர்பார்ப்புடன் நம்மை நோக்கும் மிருகங்கள் கூட தன் குரலை நயமாக மாற்றிக்கொள்கின்றன. காதல், அன்பு என்பது ஒற்றைத்திசையை சார்ந்தது. அது கேட்டு பெறக்கூடியதல்ல, ஏனெனில் அது அகநிலை கொண்டது. அனைத்து தீவிர நோக்கங்களுக்கும், நீங்கள் அடுத்தவர் மீது கொண்ட காதல், அன்பு, உங்களிடமிருந்து யாருக்காக ஏவப்பட்டதோ அவரிடம் மட்டுமே பாயும்.

காதலும் காப்பியும் சூடாக இருக்கும் பொழுது தான் சுவைக்கும் என ராபிந்தர நாத் தாகூர் கூறுகிறாராம்.

காதலிக்கும் ஒருவன் அவனுடைய அன்பு பிரதிபலித்து, அவனும் திரும்பி அவளால் காதலிக்கப்படுவான் என்பதை எதிர்பார்க்கக்கூடாது. காதலை கோர முடியாது. நீங்கள் யாரையும் உங்களை காதலிக்கும்படி கோர முடியாது. ஒருத்தருக்கொருவர் காதலித்துக்கொள்ள பலவந்தமும் செய்ய முடியாது. அதே

trains the daughter, it is the responsibility of the father to keep an eye and delivery timely advice to the son.
Since sex is taken as a taboo in every family, that matter is not at all discussed openly either by the parents or by the children. Still, instead of labelling the talk with a sin, brushing aside such an important subject under the carpet, a cursory timely advice on the precautions, and repercussions of the indulgent behavior on the part of the children to avoid crushes on the opposite sex is most essential and imperative, looking at the alacrity of the possibility of slipping from the moral heights.

Children those who are properly not counselled are prone to the bad idea that their parents are against their wellbeing, which results in suspicion and disgust, confusion and crakes between the parents and the children. These type of children sometimes, try to break all boundaries of the cultural and moral ethics, only to find out the so far forbidden pleasure of the intimacy with opposite sex.

Love is pure and holy. Love won't cause death. Only the hatred, desperation, or depression are the reasons that drive one to the extreme step of committing suicide or causing death.

Somebody rightly said that love is such a rainbow that could be seen only by the two who are in love. Even the animals change their tone while looking at us with some expectations. Love is unidirectional, unconditional, it cannot be demanded, since it is subjective. For all intensive purposes, the love you have for another person only flows from yourself to

போல், நீங்கள் எவ்வளவு தான் முயற்சித்தாலும், நீங்கள் விரும்பாத, வெறுக்கும் ஒருவரை, அல்லது ஒருவளை காதலிக்க உங்களை நீங்களே வற்புறுத்த முடியாது. உங்கள் அன்பு மற்றவளுக்கும், அவள் அன்பு உங்களுக்கும் ஒன்று இருக்கும் அல்லது இருக்காது. அதை நீங்கள் விரும்பியது போல் மாற்ற முடியாது. காதல் விவகார தோல்விகளிலிருந்து உங்கள் மேனியை பாதுகாத்துக்கொள்ள, "குதிக்கும் முன்பே கவனி" என்ற கொள்கையை பின்பற்றுவதே நல்லது. நீங்கள் காதலிக்க வேண்டும் அல்லது காதலிக்கப்படவேண்டும் என ஆசைப்பட்டால், உங்கள் நல்லெண்ணத்தின் வெற்றிக்கு, இதோ, சில உதவி குறிப்புகள்:

காதல் யாருக்கு, எங்கே, எப்படி, எப்பொழுது மலரும் என எவரும் அறியார். இருந்த போதிலும், நீங்கள் எதிர்பார்ப்புடன் இருந்தால், பின் வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

- முதல் காரியமாக, உங்களை நீங்களே அறிந்து கொள்ளுங்கள். உங்களை நீங்களே தீர்ப்பிட்டுக்கொள்ளாதீர்கள், ஆனால், மற்றவர் உங்களை மதிப்பிட்டு தீர்ப்பளிக்க விட்டுவிடுங்கள்.

- உங்கள் குடும்பத்தை, உங்கள் பெற்றோரை, உங்கள் சகோதர சகோதரிகளை, உங்கள் உற்றார் உறவினரை சிறிது திரும்பி பாருங்கள். சமுதாயத்தில், அவர்களனைவரும் பெற்றிருக்கும் மானம், மரியாதை, அந்தஸ்து ஆகியவைகளை ஒரு கணம் நினைத்துப்பாருங்கள்.

- நன்கு அறிந்து, நீங்கள் விரும்பும், நீங்கள் காலா காலம் உங்கள் வாழ்நாள் முழுக்க வாழப்போகும் விருப்பத்தேர்வைப்பற்றி துல்லியமாக விசாரித்து வைத்துக்கொள்ளுங்கள். தவறாதீர்கள், தவறினால், நேரம் கடந்து வருந்தவேண்டியதிருக்கும்.

- நீங்கள் காதலிக்கும் நபருடைய குடும்பத்தின் பின்னணியையும் சமூகத்தில் அவர்களுக்கு இருக்கும் அந்தஸ்தையும் அறிந்து கொள்ளுங்கள். உங்களால் உங்கள் காதலிக்கோ அல்லது உங்கள் காதலியால் உங்களுக்கோ இழைக்கப்படும் ஒரு சிறிய ஊறு அல்லது உங்களுடைய ஒரு தவறான நடவடிக்கை, உங்கள் இருவரையும்

whom it is intended.

Rabindranath Tagore says that love and coffee taste good only when they are hot.

A person who develops love towards another, should not expect the reflection of love back to him from that person whom he loves, because love does not reflect. Love cannot be demanded. You cannot demand of someone else that he or she must love you back, nor you can force each other to love, likewise, you cannot force even yourself to love someone whom you hate or do not love, no matter how hard you may try. Your love for others and theirs for you, either “is” or “is not”. You cannot change it in any way you want.

In order to save your skin from being disappointed in love affairs, the policy of “look before you leap” must be good to follow. Here are some tips to be successful in your good intentions, if at all you wish to love and to be loved.
None knows the blossoming of love is for whom, where how and when. However, if you are on the lookout, you can take the following precautionary measures:

- At the outset, know yourself well, don’t judge yourself, but leave it to others to judge and pass comments on you.
- Look back at your family, your parents, your brothers and sisters, your relatives. Think for a while the status that you all enjoy in your society.

முடிவில்லா ஆபத்தில் சிக்க வைத்துவிடும்

- ஒருவருக்கொருவர் அன்பாகவும் நண்பாகவும் இருந்து கொள்ளுங்கள். அதனால் எந்த தப்பும் கிடையாது. ஆனால், நீங்கள் உங்களை வெளிப்படுத்தும் முன், நீங்கள் விரும்பும் நபருடைய நடத்தை விதத்தை கவனிக்க தவறாதீர்.

- உங்கள் விருப்பத்தேர்வை தீர்மானிக்கும் மன நிலையும் ஆற்றலும் உங்களுக்கு உள்ளதா என்பதை கவனியுங்கள். இதைப்பற்றி உங்கள் குடும்பத்துடன் கலந்தாலோசிக்க உங்களுக்கு உடலுக்கும் உள்ளத்துக்கும் தைரியம் உள்ளதா என்பதையும் கவனியுங்கள்.

- நீங்கள் காதலிக்கும் அவளிடம் அல்லது அவனிடம், சில பழக்கங்களை துறக்கும் பக்குவமும் மன்னிக்கும் மனப்பான்மையும் உள்ளதா என்பதையும் நீங்கள் விரும்பாதவற்றை போக விடும் மனோபாவம் உள்ளதா என்பதையும் கண்டுகொள்ளுங்கள்.

- உங்கள் காதல் (அவன் அல்லது அவள்) உங்களை தவறாக வழி நடத்துகிறதா அல்லது உங்கள் பெற்றோருக்கு எதிராகவோ, குடும்பத்திற்கு எதிராகவோ, சகோதர, சகோதரிகளுக்கு எதிராகவோ அல்லது உறவினர்களுக்கு எதிராகவோ தூண்டிவிடுகிறதா என்பதை குறித்துக்கொள்ளுங்கள்.

- உங்கள் குடும்பத்தின் கலாச்சார, மத, குல விருப்பங்களை கருத்தில் கொண்டு செயல்படுங்கள், ஏனெனில், அவைகளின் பொருத்தமின்மையே அநேகமாக அனைத்து காதல் முறிவு, காதல் தோல்விகளின் முக்கிய காரணமாக இருக்கிறது. உங்கள் காதலை அனைத்தைவிட உயர்த்தி அதை நியாயப்படுத்த, அந்த நியதிகளுக்கோ, அந்த விதிமுறைகளுக்கோ எதிராக செல்லாதீர். சென்றால் வருந்துவீர். அது நியாயமற்ற சுயநலமே தவிர வேறொன்றுமில்லை. அதுதான் உண்மையான குருட்டுக்காதல்.

- Know well, enquire the minute details of your choice, the partner you are going to live with, throughout your lifetime. Make no mistake, lest it will be too late to repent, later.
- Know about the family back ground of your partner and the status the family enjoys in the society. One wrong step towards you by your partner, or your wrong step towards your partner would expose both of you to unending peril.
- Behave with passion and be friendly with one another. That is going to be no harm. But don't fail to notice the behavioral pattern of your choice, before you express yourself.
- See if you have the presence of mind to judge your choice properly, physical and mental power to talk to your family about your choice.
- Asses your lover if he or she has the ability to forego things, and he lets go things that both of you think undesirable.
- Note if the lover misguides you, or provokes you against your parents, family, siblings, or relatives.
- Take into consideration, the cultural, religious, castes choice of your family, because almost all the cases of failure occurs due to this mismatch. Don't try to go against your normal ethics trying to justify your love above everything. If you go against, you will repent. That

- காதலை தனக்கு சாதகமாக எடுத்துக்கொள்ளதீர். நீங்கள் விரும்பாத ஒருத்தரை உங்களால் காதலிக்க முடியாது என்று இருக்கும் பொழுது, ஒருத்தரை, அல்லது ஒருத்தியை, நீங்கள் விரும்புவதால், அவனோ அல்லது அவளோ உங்களை விரும்பவேண்டும் என்று எதிர்பார்க்கமுடியாது.

- ஒரு தேவையாக கருதி அல்லது கலாச்சார நியதியாக காதலில் வீழ வேண்டாம்.

- உங்கள் நண்பர்களின் காதலை முன் நிறுத்தி, அவர்கள் காதலிக்கின்றனரே என்பதற்காக, அவசியமில்லாமல் மூலை முடுக்குகளில் திரிந்து, காதலை தேடாதீர்கள். இது உங்கள் காலை நீங்களே கோடாறியால் வெட்டிக்கொள்வதுபோல் ஆகிவிடும்.

- மேற் குறிப்பிட்டவைகளை புறக்கணித்து, உங்கள் சுய நல கள்ள வேட்டைக்கு கிளம்பினால், உங்களை நீங்களே தொல்லைக்கு ஆளாக்கிக்கொள்வதோடு நில்லாமல், உங்களை சூழ்ந்துள்ளவர்களையும், பெரிய நம்பிக்கைகளுடன் உங்களை பெற்றெடுத்தவர்களையும் இடருக்குள் தள்ளிவிடுவீர்.

காதல் ஒரு அருமையான, அற்புதமான பொக்கிஷம். இரு மனங்களின் சங்கமம், இணைக்க மெல்லிய இழையோ, எந்த ஊடகமோ இன்றி வண்ணக்கருத்துக்களை பரிமாற்றிக்கொள்ளும் வை-ஃபை (Wi-Fi). சிலர் இதை மன்மத மகரந்தமாக வர்ணிக்கின்றனர். அப்படிப்பட்ட காதல், நாளுக்கு நாள் தன் பிரகாசத்தை இழந்து வருகிறது.

முன்பெல்லாம், புதிய தம்பதியருக்கு, ஒருத்தருக்கொருவர் புரிந்துகொள்ள வாரங்களும் மாதங்களும் பிடித்தது. மண முடித்தும் உடனே நெருங்கி பழக நாணம்கொண்டிருந்தனர். ஆனால், இப்பொழுது, கலாச்சார விதிமுறைகள், மாற்றியமைக்கப்பட்டு, வேறு விதமாக, விளக்கப்படுகின்றன. மாங்கல்ய முடிச்சு போடும் முன்பு, கைப்பேசியே (cell phone) அவர்களின் பாதி தாம்பத்திய வாழ்வை கணித்துவிடுகிறது

is nothing else but selfishness without reason, and that is the real blind love.

- Don’t take love for granted. Since you cannot love someone you do not like, you cannot expect someone else to love you back only because you love him or her.
- Don’t try to fall in love as a necessity and the demand of the culture.
- Don’t unnecessarily try to lurk in every corner on the lookout of love feeling that since your friends love someone of their choice, you should also be in love with someone. This would prove to be hitting your own leg with an axe.
- If you ignore the above points, and go ahead with your selfish prowl you not only invite trouble for yourself but also you expose to hardship all those around you, including those who gave you birth with great hopes.

Love is a wonderful and fantastic treasure, union of two hearts without any means and media, and an exchange of colorful idea. Someone describes it to be a cupid pollen. But it loses its moral luster day by day.
Earlier, it took weeks and months by the newly wed couples to understand each other. They felt shy to be so close so quickly after the marriage. But the cultural limits have now been redefined. Cellphone talk alone completes almost half of their married life, before they tie the nuptial knot.

பின் விளைவுகளை சிந்திக்காமல், அநேகமாக பையன்கள் தன் சினேகிதியின் மீதுள்ள ஆர்வக்கோளாறினால், தன் குடும்ப இரகசியங்களை கக்கி விடுவதினால், அதை அவள் தன் சேலை முந்தானையில் முடிச்சிட்டுக்கொள்கிறாள், அவசியப்படும் பொழுது, மணம் முடித்தபின், தன் மறுவீட்டில், ஒரு பெரிய சூத்திரதாரி சதுரங்கத்தில் பகடைகளை நகர்த்துவதுபோல், அந்த முடிச்சை அவித்துவிடுகிறாள். தன் சினேகிதனிடமிருந்து மனப்பாடம் செய்துகொண்ட செய்திகளை அவசியப்படும் பொழுது, கெட்டிக்கார அரசியல்வாதியைப்போல் அனைத்து சொந்த பந்தங்களுக்கும் ஆங்காங்கே சோதனை சாவடிகளை நிறுவி விடுகிறாள். இது நாணயத்தின் ஒருபக்கமாக இருக்கும் பொழுது, மறு பக்கம், அனுபவ குறைச்சலின் காரணமாக பார்வைக்கோளாறினால், கண்டவுடன் காதல்கொண்டு, குருட்டுத்தனமாக ஒருத்தருக்கொருவர் விரும்புகின்றனர். அவர்களுக்கு வருங்காலத்தைப்பற்றியோ, சமூகத்தில் அவர்களுடைய குடும்ப மானம், அந்தஸ்தைப்பற்றிய கவலையோ இருப்பதில்லை. போகக்கூடாத இடங்களில் எல்லாம் அலைந்து திரிந்து, காதலின் புனிதத்தன்மைக்கு கேடு விளைவித்து, தெரிந்தும், தெரியாமலும் குடும்பங்களின் மன நிம்மதியை கெடுத்துவிடுகின்றனர்.

கை கோர்த்த காதல் கை கூடுவதில்லை. அர்பணிப்பும் உறுதியும் அல்லாமல், அவர்களின் மனங்களில் ஆழமாக நங்கூரமிடப்படாத காதல், தன் பிடிப்பை தொலைத்துவிடுகிறது. இதை அறியாமலேயே, படுக்கையை பங்கிட்டு, நிரந்தரமாக தன் கற்பையும் கண்ணியத்தையும் தொலைத்துவிடுகிறார்கள். அதுவரை அவர்களுடைய களங்கப்படாத பண்பை கடிவாளமற்ற பட்டத்தைப்போல் காற்றில் பறக்கவிட்டு, கண்ணீர் கடலில் மூழ்கிவிடுகிறார்கள்.

ஒரு ஆணும் ஒரு பெண்ணும், உடல், மன மற்றும் ஆன்மீக காரணங்களுக்காக இணைவது இயற்கையே, அப்படி இணைந்தால், அவர் தன் பண்பையும் கற்பையும், மானத்தையும் கெடுத்துக்கொள்ளக்கூடாது. பெற்றோர், உடனே எந்த வித காதலையும் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் உங்கள் காதல், அறநெறிகளுக்கு கட்டுப்பட்டுள்ளதை அவர்களை நம்பவைக்கவேண்டும். அவர்கள் உங்கள் நலனை நாடுபவர், நிபந்தனையற்ற அன்பும் பெற்றோருடைய கவலையும் உங்கள் மீது கொண்டிருப்பவர்.

Mostly the groom without realizing the after effects, due to interest disorder with his sweetheart, voluntarily vomits all the secrets of his family, only to be kept tied securely by the brides in the palloo borders of her saree, to be unfolded before in-laws, as and when necessary as if a mastermind manipulates the dice on the chessboard. By the information got from the husband, very shrewdly she plays politics creating check points for each and every member of the family. This being one side of the coin, the other side, due to lack of experience, struck by visual impairment, the boy and the girl in their first sight itself, love each other blindly. They never think of the future or status of their families in the society. They knowingly or un-knowingly venture to disturb the peace of mind of the families by visiting and wandering in places where they shouldn't have been, thus spoiling the holiness of the meaning of love.

The hands-joined love does not last long. It loses the grip in the absence of a deeply committed anchor of love and pledge in their hearts. Without realizing this hard fact, they share the bed and lose their chaste, innocence and dignity forever. When their unblemished character hurled to fly in the air like a kite unbridled, they, then drown themselves in the ocean of tears.

It is quite natural that a man and a woman unite, for several reasons including those of physical, mental and spiritual. If they so unite, they should not harm their character, chaste and dignity. Parents do not approve any type of love instantly. But your love should be in such a way that they are convinced of your commitment to the morality. They are your

| | |
|---|---|
| திருமணங்களின் தோல்விக்கு இளையவர் தன் துணையை தேர்ந்தெடுக்க படும் அவசரம் தான் முக்கிய காரணங்களில் ஒன்றாக இருக்கிறது. உங்கள் பெற்றோருடைய வயிறும், மனமும் பற்றி எரியும் பொழுது, உங்கள் காதலுடன் நீங்கள் சுகமாக வாழ இயலாது. காதல் தியாகம் வேண்டுகிறது. அநேக நேரங்களில், நீங்கள் உங்கள் காதலுக்காக பெற்றோரை தியாகம் செய்ய வேண்டியது வரும். அல்லது, உங்களால் மேற்கொள்ளப்பட்ட அவசரக்காதலை, பெற்றோரின் நலனுக்காக பலியிட வேண்டியதிருக்கும். விருப்பம் உங்களுடையது. குதிக்கும் முன் கவனியுங்கள். நீங்கள் குதிக்க நேர்ந்தால், பயணத்தை முடிக்க நேரம் எடுத்துக்கொள்ளுங்கள். கண்ணியமாகவும், கற்புடனும், பரிசுத்தமாகவும் இருந்து, உங்கள் பண்பை, மான மரியாதையை தக்கவைத்துக்கொண்டு, உங்கள் மகரந்தம் களங்கப்படாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். அனைவரின் ஒப்புதலும் ஆசீர்வாதமும் பெற்று உங்கள் காதலில் வெற்றியடையுங்கள். இல்லற வாழ்வில் செழித்து, வாழையடி வாழையாக, குடும்பத்தை பேணி வளர்த்து, நீடூடி வாழுங்கள். | well-wishers, hence, take care of their parental worries with unconditional love towards you.<br><br>The haste in selection by young ones is the main reason for most of the failed marriages. You cannot be happy with your love while your parents' hearts burn. Love demands sacrifice. Most of the time, you will have to sacrifice your parents for the sake of your sweetheart. Or you will have to sacrifice your love you assumed in haste, for the sake of your parents' well-being. Choice is yours. Look before you leap. If you leap, then take time to complete your journey. Be chaste, pure and holy, preserve your dignity, without allowing your pollen to get polluted. Win your love with the consent and blessings of all involved, develop your domestic life, long live with prosperity, progeny generation to generation. |


http://Translation.Shaadmaani.Net

translation@shaadmaani.net